## சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியில்

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மழை வெள்ளச் சேதத்தைப் பார்வையிட்டார்!






கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று இரவு, தமது சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதிக்கு உட்பட்ட லாயிட்ஸ் காலனி, வி.பி. ராமன் சாலை, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, ஜான் ஜானிகான் சாலை, சி.என்.கே. சாலை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் கொட்டுகிற மழையில் நேரில் ஆய்வு மேற்கொண்டு, சாலையில் தேங்கியிருந்த மழைநீரை விரைந்து அகற்ற அதிகாரிகளை அறிவுறுத்தினார். மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து கேட்டறிந்தார். பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி பிரியா ராஜன், சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., பகுதிச் செயலாளர் எஸ்.மதன்மோகன், மாவட்ட துணைச் செயலாளர்கள் ஆர்.என்.துரை, வி.எஸ்.கலை, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் துபாய் விஜய், கமலா செழியன் எம்.சி. உள்ளிட்டோர் உடன் சென்றனர்.

### பதிவுத்துறை சந்தை வழிகாட்டி மதிப்பு

## சீரமைப்புக்குழுவின் உயர்மட்டத் தலைவராக ஆர்.வாசுகி நியமனம்!

### நிலம் சம்பந்தமான ஆவணங்களை கணினிப்படுத்தும் முறையினைக் கொண்டு வந்தவர்!

சென்னை, டிச.4-

பதிவுத்துறையில் வழிகாட்டு மதிப்பினைச் சீரமைப்பதற்காக உயர் மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதன் தலைவராக ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி தேவஜோதி ஜெகராஜன் நியமிக்கப்பட்டு 22.5.2023 அன்று பொறுப்பேற்றுக் கொண்டார். ஆனால் சொந்தக் காரணங்களுக்காக அவர் 3.7.2023 அன்று ராஜினாமா செய்தார்.

அந்த இடத்தில் தற்போது ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரியான திருமதி ஆர். வாசுகி நியமிக்கப்பட்டுள்ளார். அவர் 1.12.2023 அன்று பதவியேற்றுக் கொண்டுள்ளார்.

அவரது தலைமையிலான உயர்மட்டக் குழுவானது, வழிகாட்டி மதிப்பில் உள்ள முரண்பாடுகளை தீவிரமாக ஆராய்ந்து அதனை நேர் செய்ய உரிய பரிந்துரைகளை பதிவுத்துறைக்கு அளிக்கும்.

இக்குழுவின் தலைவராக தற்போது பொறுப்பேற்றுள்ள திருமதி ஆர். வாசுகி, ஐ.ஏ.எஸ். நில அளவைத் துறையில் ஆணையராகப் பணியாற்றி உள்ளதால் நில விவரங்கள் குறித்த அதிக அனுபவம் கொண்ட வர் என்பதும்,

அத்துறையில் ஆணையராக இவர் பணியாற்றும்போதுதான், முதன் முதலாக நிலம் சம்பந்தமான ஆவணங்கள் தமிழ்நாடு முழுவதும் கணினிப்படுத்தப்பட்டு, இணைய வழிப் பட்டா மாறுதலும் அறிமுகப்படுத்தப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

### திரு.வி.க. நகர் சட்டமன்ற தொகுதியில்

## கனமழையில் வீடு இடிந்து விழுந்தது!

### பா.தாயகம் கவி எம்.எல்.ஏ. நேரில் ஆறுதல்- நிவாரணம் வழங்கினார்!

சென்னை,டிச.4-

திரு.வி.க.நகர் சட்டமன்ற தொகுதி வார்டு எண் 72ல் கன மழை காரணமாக நரசிம்மன் நகர், 3வது தெரு, 35/10 என்கிற எண் கொண்ட வீடு இடிந்து விழுந்தது.

இடிந்து விழுந்த வீட்டில் வசித்து வந்த மணி, திருமதி சாந்தி, திருமதி கலாவதி ஆகியோரை கழக துணை அமைப்பு செயலாளர் திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. நேரில் சென்று சந்தித்து ஆறுதல் சொல்லி அவர்களுக்கு தேவையான நிவாரண பொருட்களை வழங்கினார்.

அதனை தொடர்ந்து பெரம்பூர் வட்டாச்சியர் அவர்களுக்கு தகவல் தந்து தொடர்புடைய அதிகாரிகளை வரவழைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அதிகாரிகள் மூலம் அறிக்கை அனுப்பும் பணியினை மேற்கொண்டார்.

மாமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் மு.சரவணன், வட்டக ழக செயலாளர் அபாய் ,மற்றும்சிவஜானி வழக்கறிஞர்கள் சங்கர், அரவிந்த்,யுவராஜ் ஐ.டி. விங்.கௌதம் மற்றும் வருவாய் துறை அதிகாரிகள்,மாநகராட்சி அதிகாரிகள் உடன் இருந்தனர்.



சேலத்தில் 2வது இளைஞர் அணி மாநாட்டினையொட்டி நடைபெற்ற இருசக்கர வாகனப் பிரச்சாரப் பேரணி, குமரியில் வள்ளுவர் சிலை முன்பு தொடங்கி சேலம் மாவட்டத்தில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை முன்பு 27.11.2023 அன்று நிறைவுபெற்றது. அப்மாபோது, நாட்டின் முழக்கங்களை இருசக்கர வாகனப் பிரச்சாரப் பேரணி ஒருங்கிணைப்பாளர் அ.ராஜா தமிழ்மாறன், வள்ளுவர் மண்டல ஒருங்கிணைப்பாளர்கள் ஆர்.கே.கே.கார்த்தி, பி.பிரவின், என்.பால்துரை பெரியார் மண்டல ஒருங்கிணைப்பாளர்கள் சன் சுரேஸ், எஸ்.எஸ்.எஸ்.செல்வம், பி.டேவிட் அண்ணா மண்டல ஒருங்கிணைப்பாளர்கள் கே.குட்டி, டி.ஆர்.ரவீந்திரகுமார், எம். உத்தமன், கலைஞர் மண்டல ஒருங்கிணைப்பாளர்கள் பர்மா எம்.ரூபன், ஜி.முத்துகுமார், இ.எஸ்.உதயநிதி மற்றும் 188 தி.மு.க. ரைடர்கள் பறைசாற்றினர்.

### உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்! சிதம்பரம் ந.தியாகராஜன் முன்னிலை! உளுந்தூர்பேட்டை மு.நசீர் அகமது ஏற்பாடு!

## குவைத் தி.மு.க. அயலக அணி சார்பில் கிரிக்கெட் போட்டி!

### காணொலி மூலம் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. - புதுக்கோட்டை எம்.எம்.அப்துல்லா தொடங்கி வைத்தனர்!

குவைத், டிச.4-

குவைத் குவைத் நாட்டில் தி.மு.கழக அயலக அணி - குவைத் மண்டலத்தில் இளைஞர் அணி சார்பில் தி.மு.கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது.

இந்த போட்டியினை தமிழகத்தில் இருந்து கழக அயலக அணி தலைவரும், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் கலாநிதி வீராசாமி, கழக அயலக அணியின் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான புதுக்கோட்டை எம்.எம். அப்துல்லா ஆகியோர் காணொலி மூலம் துவக்கி வைத்து வாழ்த்துரை வழங்கினார்.

இந்த போட்டிகளை தி.மு.க அயலக அணி குவைத் பொறுப்பாளர் சிதம்பரம் ந.தியாகராசன் முன்னிலையில் மண்டல இளைஞர் அணி செயலாளர் உளுந்தூர்பேட்டை மு.நசீர் அகமது ஏற்பாடு செய்திருந்தார்.

அமைப்பின் மருத்துவ அணி துணைச் செயலாளர் உளுந்தூர்பேட்டை சு.வெங்கடேசன், அமைப்பின் தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் மேட்டுவிளை ஐ.ஜானவாஸ், தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் பரங்கிப்பேட்டை மு.நசுருதீன் ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

அயலக தி.மு.க. குவைத் நிர்வாகிகள் - செயலாளர் புதுக்கோட்டை மு.பஷீர் அகமது, இணைச் செயலாளர்கள் புதூர் உத்தமனூர் ஜலீல் முஸ்தபா, முனசந்தை சிக்கந்தர், துணைச் செயலாளர் ஆயங்குடி சையது முஸ்தபா, துணைப் பொருளாளர் புதுவை அ.அறிவுமணி, பொறியாளர் அணி செயலாளர் முத்துப்பேட்டை ம.சபரிவாசன், மக்கள் தொடர்பு செயலாளர் கறம்பக்குடி ஜாபர் சாதிக், கிழக்கு மண்டல அமைப்பாளர் குடந்தை சி.தியாகராஜன் இளைஞர் அணி துணைச் செயலாளர் தக்கலை ஜோசப் பெர்லின், தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் புதுகை கனி, மக்கள் தொடர்பு துணைச் செயலாளர் குமரி ஜோசப் எடிசன் ஆகியோர் போட்டிகளை நடத்தி முடித்தனர்.

இந்த 20 ஓவர் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ், டெசர்ட் நைட்ஸ், ஜி4, கே.ஒய்.எஃப்.சி.சி, லங்கா ராபியன்ஸ், மொஹபுலா கிங்ஸ், ராயல் ஸ்டார்ஸ் குவைத், தமிழ் ஃபயர் போர்ட்ஸ் ஆகிய எட்டு அணிகளின் வீரர்கள் கலந்து கொண்டு விளையாடினர்.

இதில் ராயல் ஸ்டார்ஸ் குவைத் அணி அனைத்து போட்டிகளிலும் வென்று முதல் பரிசை தட்டிச் சென்றது. சென்னை சூப்பர் கிங்ஸ் குவைத் அணி இரண்டாம் பரிசை வென்றது.

அன்று மாலை அரங்கத்தில் நடைபெற்ற உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவில் வெற்றி பெற்ற அணிகளுக்கு நினைவுக் கோப்பை மற்றும் ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன.

இளைஞரணி செயலாளர் உளுந்தூர்பேட்டை மு.நசீர் அகமது தலைமையில் நடைபெற்ற இந்த விழாவிற்கு தி.மு.க. அயலக அணி பொறுப்பாளர் சிதம்பரம் ந.தியாகராஜன், பொருளாளர் பத்தமடை சிந்தா பக்கீர், இணைச் செயலாளர் புதூர் உத்தமனூர் ஜலில் முஸ்தபா, துணை செயலாளர்கள் ஆயங்குடி சையது முஸ்தபா பத்தமடை கே.என்.கே. நாகூர், துணைப் பொருளாளர் புதுவை அறிவுமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அமைப்பின் நிர்வாகிகள் முத்துப்பேட்டை ம.சபரி வாசன், குடந்தை சி.தியாகராஜன், புதுவை சபீக் கான், உளுந்தூர்பேட்டை சு.வெங்கடேசன், திருவாரூர் திருவரங்கன், அணைக்காடு ரோம்லஸ் தேவசகாயம், திட்டச்சேரி சாகுல் ஹமீது, புது ஆத்தூர் சாகுல் ஹமீது, பரங்கிப்பேட்டை மு.நசுருதீன், குடந்தை ஆர்.முருகன், கொளத்தூர் கணேஷ், களந்தை மீரான், பத்தமடை பாய்ஞ்சி பீர் முகமது, குமரி ஜோசப் எடிசன், புதுகை கனி ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியின் நிறைவாக அமைப்பின் இளைஞரணி துணைச் செயலாளர் தக்கலை ஜோசப் பெர்லின் நன்றி கூறினார்.



பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஸ் பொய்யாமொழி உலக மாற்றுத்திறனாளிகள் தினவிழாவை முன்னிட்டு திருச்சிராப்பள்ளி கலையரங்கத்தில் நேற்று 03.12.2023 நடைபெற்ற விழாவில் 292 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூபாய் 67 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், சிறப்பாக சேவையாற்றிய தொண்டு நிறுவனங்களுக்கு கேடயம் மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களையும், மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகளவில் வேலை வாய்ப்பு அளித்த நிறுவனங்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களையும், பல்வேறு விளையாட்டுப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாற்றுத்திறனாளி மாணவ, மாணவிகளுக்கு பாராட்டுச்சான்றிதழ்களையும் வழங்கி விழாப்பேருரையாற்றினார். அருகில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.மா.பிரதீப்குமார், , மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் திரு.சந்திரமோகன் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.